செய்தி வெளியீடு எண்:078 நாள்: 09.02.2017

<u>செய்தி வெளியீடு</u>

# 43வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி –2017

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத்திடலில் 1974ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நடத்தி வருகிறது. தொடர்ந்து நடைபெறும் இப்பொருட்காட்சியில் தமிழக அரசின் அனைத்து துறைகளின் நலத்திட்டங்களையும், வளர்ச்சி பணிகளையும் பொதுமக்கள் அறிந்திடும் வண்ணம் அரங்குகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. பார்வையாளர்களின் வருகையும் அதிகரித்துள்ளன.

## கருப்பொருள் : (THEME)

இந்த ஆண்டு பொருட்காட்சியின் கருப்பொருள் : "**Tourism for all–Promoting Universal Accessibility**" " அனைவருக்கும் சுற்றுலா – உலகளாவிய சுற்றுலா பரவலாக்கம்" என்பதாகும்.

## மத்திய, மாநில அரசுத் துறைகளின் பங்கேற்பு :–

இப்பொருட்காட்சியில் 50 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு :–

25 மாநில அரசுத் துறைகள்

23 அரசுத் துறை நிறுவனங்கள்

1 மத்திய அரசுத் துறை நிறுவனம் (தெற்கு இரயில்வே)

1 பிற மாநில அரசுத் துறை (கர்நாடகம்)

இவை தவிர 120 சிறிய கடைகள் மற்றும் 60 தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது

மாநில அரசின் ஆக்கப்பூர்வ பணிகளையும், மக்கள் நலனுக்காக செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் "Working Model"–களுடன் அரசு துறையின் அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அரசுத்துறை அரங்குகளில், மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், விளக்கவுரை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

**<u>அரசு அரங்குகளின் சிறப்பு அம்சங்கள் :–</u>**

**<u>இந்து சமய அறநிலையத்துறை :–</u>**

திருக்கோயில்களிலிருந்து பெறப்படும் பிரசாதங்கள் பொருட்காட்சிக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**<u>சுகாதாரத்துறை :–</u>**

இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, இதய வரைவலை பரிசோதனைகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அண்ணா கலையரங்கம் :–</u>**

பெரியவர்களும், சிறியவர்களும் கண்டுகளிக்கும் வகையில் நாட்டியம், நாடகம், இன்னிசை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் தமிழர்களின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தினந்தோறும் மாலை 6.00 முதல் 9.00 மணி வரையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**<u>பொழுதுபோக்கு வளாகம் :–</u>**

80,000 சதுர அடி பரப்பளவில் பொழுதுபோக்கு வளாகம் அமைந்துள்ளது. அதில் 30க்கும் மேற்பட்ட விளையாட்டு சாதனங்கள் அமைந்துள்ளது. மேலும், இராட்சத சாகச விளையாட்டு சாதனங்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மற்றும் நவீன கேளிக்கை சாதனங்கள் மக்கள் மனதை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் இரயில், மீன் காட்சியகம், 3D தியேட்டர், 3D செல்பி மற்றும் 18 அதிநவீன ராட்டினங்கள் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**<u>இந்த பொருட்காட்சியின் சிறப்பு அம்சங்கள் :–</u>**

1. **<u>3டி காட்சிகள்</u>**

   பலவகையான அனிமேஷன் 3டி காட்சிகளை இளைஞர்கள் கண்டுகளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

2. **<u>வன உலகம் :–</u>**

   காட்டில் வாழும் மிருகங்களின் வடிவங்களைக் கொண்டு வன உலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது மக்களை மிகவும் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**<u>பொருட்காட்சியின் நுழைவுக் கட்டணம்</u>**

| | |
|---|---|
| பெரியவர்களுக்கு | ரூ. 25.00 |
| சிறுவர்களுக்கு | ரூ. 15.00 |
| மாணவ, மாணவியர்களுக்கு | ரூ. 15.00 |

பொருட்காட்சிக்கு வருகை புரியும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நுழைவுச்சீட்டிற்கு குலுக்கல் முறையில் சிறப்பு பரிசுகள் (சுற்றுலா செல்வதற்கான) வழங்கப்படும்.

**<u>பொருட்காட்சி நேரம் :–</u>**

| | |
|---|---|
| அலுவலக நாட்களில் | மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை |
| ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் | காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை |

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொது மக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 11 இலட்சம் மக்கள் சுற்றுலா பொருட்காட்சியை கண்டு களித்தனர். இந்த ஆண்டும் லட்சக்கணக்கான மக்கள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், புதுமையான கவனத்தை ஈர்க்கும் பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**